# ★ விமானத்தாக்குதலில் 18 ராணுவத்தினர் பலி

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 83 ஆனி 9 ஜுலை 10 இதழ் 132
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23-06-1991

(யாழ்ப்பாணம்)
வவுனியாப் பகுதியில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தின் 3-ம் நாள் இரு பொம்மர் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தவறான தாக்குதலில் 18 இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டதாக வவுனியாப்பகுதியில் உள்ள பிராமணாலங்

[4-ம் பக்கம் பார்க்க]

## இரு தமிழர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)
திருகோணமலை மாவட்டத்திலுள்ள தோப்பூர் கிராமத்திலுள்ள கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரண்டு தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தால்


(4-ம் பக்கம் பார்க்க)

## தென்னிந்திய பாடகர்களின் இசை நிகழ்ச்சி ரத்து

[கொழும்பு]
கொழும்பில் இன்று நடைபெறவிருந்த தென்னிந்தியத் திரைப்படப் பாடகர்களின் நிகழ்ச்சிகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
பிரபல இசையமைப்பாளர் எம். எஸ். விஸ்நாதனின் இசைக் குழு இன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

★ கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு காட்சிகள் ★



தற்கொலைப்படைத் தாக்குதலில் கூட்டுப்படை தலைமையகம் தகர்ந்து வீழ்வதை முதல் படத்திலும், இராணுவ வாகனங்கள் முற்றாகச் சேதமடைந்ததை 2-வது படத்திலும், கட்டிடம் தகர்ந்தபோது அங்கிருந்து சிப்பாய்கள் தப்பிஓடுவதை 3-வது படத்திலும் காணலாம். [படங்கள்: தேவா]

# கொழும்பில் தற்கொலைப்படை: ஜனாதிபதிக்கு கடும் பாதுகாப்பு

(கொழும்பு)
**ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா, பிரதமர் திரு. விஜயதுங்கா உட்பட பல முக்கிய அமைச்சர்களை இலக்கு வைத்து தற்கொலைப் படைகள் திடீர் தாக்குதலை நடாத்தலாமென சிறீ லங்கா புலனாய்வு பிரிவுக்கு ரகசிய தகவல் கிடைத்ததை தொடர்ந்து இவர்கள் அனைவருக்கும் பெருமளவு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்தே இவ் எச்சரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுடைய வாசஸ்தலங்களுக்கு மேலதிகமாக இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ரூபவாஹினி வானொலி நிலையம் முக்கியசேந்திர நிலையங்கள் உட்பட தற்கொலைப் படைகளின் தாக்குதல் இடம்பெறுமெனக்கருதப்படும் சகல பகுதிகளிலும் ஆயுதப் படையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து ஆயுதப்படையினர் கொழும்புக்கு கொண்டுவரப் பட்டுள்ளார்கள்.

மேலும் முக்கிய நகர்களின் கேந்திர இடங்களில் இராணுவ முகாம்கள் தொடர்ந்தும் இருப்பதுகுறித்து ஆராயப் பட்டுவருகிறது. மேலும் இவ்

(4-ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி ராஜினாமா!

(சென்னை)
தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி தமிழக சட்ட பேரவை உறுப்பினர் பதவியை நேற்று ராஜினாமா செய்துள்ளார்.

கடந்த 15ந் திகதி நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் திரு கருணாநிதி சென்னை துறைமுகம் தொகுதியில் வெற்றி பெற்றிருந்தார். இத் தேர்தலில் தி மு. க. சார்பில் திரு. கருணாநிதி மட்டுமே வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் கருணாநிதி தனது ராஜினாமா பற்றி தெரிவித்தார்.

தமது கட்சிக்கு ஏற்பட்ட

[4ம் பக்கம் பார்க்க]

## முப்படைத் தளபதிகள் ஜனாதிபதி சந்திப்பு

[கொழும்பு]
கொழும்பு மாநகரின் பாதுகாப்பு குறித்து நேற்று காலை முப்படைத் தளபதிகளை ஜனாதிபதி அவசரமாக சந்தித்து ஆலோசனை நடாத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இராணுவ தலைமைப் பீடம் தகர்க்கப்பட்டதையடுத்து கொழும்புநிலைகுறித்து நேற்று இச்சந்திப்புஇடம்பெற

(4ம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடித்த இடத்திற்கு பிரேமா சென்றார்

[கொழும்பு]
கொழும்பில் கூட்டுப்படை தலைமையகம் நேற்று முன் தினம் தகர்க்கப்பட்ட இடத்தை நேற்று ஜனாதிபதியும், பிரதமரும் முப்படைத் தளபதிகளுடன் நேரில்சென்று பார்வையிட்டனர்

இதேவேளை இவ்வாறான

(4-ம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவுக்கு அவகாசம்

(புதுடில்லி)
இந்திய பிரதமர் திரு. நரசிம்மராவ் அடுத்த நாலுவார காலத்துள் பாராளுமன்றில் தமது பெரும் பான்மையை நிரூபிக்க ஜனாதிபதி வெங்கட்ராமன் அவகாசம் வழங்கியுள்ளார்

## இந்திய தூதரகத்தை சுற்றி பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)
கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்திற்கு நேற்று முன் தினம் முதல் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இங்கு கடமையாற்றும் ஊழியருக்கும் பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன் தினம் கூட்டுப்படை தலைமையகம் தகர்க்கப்பட்டதை

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழர் கைது!

(கொழும்பு)
கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக தமிழர் ஒருவர் விசாரணைக்கென ஆயுதப்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது இவர் பலத்த விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதைகள் சிறு அளவாகவும், பெருமளவாகவும் நல்ல விலைக்கு வாங்குவோம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ 1398)

### பூஜைக்காக வாழும் பூவை

மீரா வெளியீடு "குடும்பத்தில் தோன்றும் அனைத்துப்புயலுக்கும் அசையாது நிற்கும் பெண்ணொருத்தியின் புனிதமான வாழ்க்கையைச் சித்தரிக்கும் சமூக நாவல்" விற்பனையாகின்றது. (சி 4880)

### அம்பாள் திருமண சேவை

Doctors, Engineers, Accountants ஆகியோருக்கு அழகிய பட்டதாரி, A/L சித்தியடைந்த மணப்பெண்கள் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/- கட்டவேண்டும். சின்னசாமிக்குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி 4893)

### தரன் ஸ்ருடியோ

அவசரமாக பாஸ்போட், அடையாள அட்டைப் படங்கள், றபர் சீல்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் முதலியன பெறுவதற்கு தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 4896)

### வெளிவந்துவிட்டது

வரலாறும் சமூகக் கல்வியும் ஆண்டு 10, துரித மீட்டலுக்கான வினாவிடை. ஆக்கம்: க. சந்திரசேகரம், (ஆண்டு II மாணவர்களுக்கும் பயன்படக் கூடியது). (ஏ 1400)

### புலமைப் பரிசு 91

ஆண்டு 5; 4 கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் அதிவிசேட சித்தியடைய ஆரம்பத்தில் இருந்து பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (சி 4898)

### மணமகன் தேவை(BRIDE)

எனது மகன் Accountant (I. C. M. A )க்கு அழகிய படித்த மணப்பெண் தேவை. விபரங்களுக்கு: ஆறுமுகப்பத்தர், C/o சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், அம்பாள் திருமண சேவை, வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி4892)

### ENGLISH TUTION

O/L 91, 92 Examiniations, Quick Revision to obtain CREDITS Spoken & Written English for beginners by B. Sc. (Ceylon). 85, Sivan koviladi, Thirunelveli (C 4899)

## விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிறீன்கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் அடுத்த மாத முற்பகுதியில், "2வது லெப். உதயக்குமார்" ஞாபகார்த்தமாக, 7 பேர் கொண்ட மென்பந்துப் போட்டியையும் 2வது லெப். நிக்ஷன் ஞாபகார்த்தமாக 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியையும் வீரவேங்கை பேனியின் ஞாபகார்த்தமாக, பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டிகளையும் நடாத்தவுள்ளனர்.

இப் போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்படி கழகத்தின் காரியதரிசி திரு. வி. பு. பாபு மேற்கொண்டு வருகின்றார். (வி)

# புலிகளின் தாக்குதலினால் இராணுவம் பின்வாங்கியது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நீலியாமோட்டையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கடந்த 19ம் திகதி முன்னேற முற்பட்டபொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கியுள்ளனர்.

கடந்த 19-ம் திகதி காலை 7மணியளவில் நீலியாமோட்டையிலிருந்து இருகுண்டுவீச்சு

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்திய அமைச்சர்களின் பெயர் விபரம்

(புதுடில்லி)

கபினெட் அமைச்சர்கள் வருமாறு: திருவாளர்கள் அர்ஜுன் சிங், பல்ராம் ஜாக்கர், எஸ். பி சவான், எம்.என். பொட்டேடார், குலாம் நபி ஆஸாத், சி. கே. ஜாபர் சரீப், திருமதி ஷீலா கௌவ், சீதாராம் கேசரி, விஜயபாஸ்கர ரெட்டி, மாதவராவ் சிந்தியா, பி. சங்கரானந், வி. சி சுக்ளா, மன்மோகன் சிங், மாதவ்சிங் சோலங்கி.

தனிப்பொறுப்பு வகிக்கும் இணையமைச்சர்கள்: திருமதி மார்க்கிரட் அல்வா, திருவாளர்கள் எச். ஆர். பரத்வாய், ப. சிதம்பரம், சந்தோஷ் மோகன் தேவ், அசோக் கைலாஷ், தாருங் காகுல், கமல்நாத், அஜித்குமார் பாஞ்சா, ராஜேஸ் பைலட், கல்பனாதிராய், கே. ராமமூர்த்தி, பி. எஸ். அங்மா. ஜெகதீஸ். டைட்லர், பல்ராம் சிங்யாதவ், குமாரி மும்தா பெனர்ஜி.

இணையமைச்சர்கள்: திருவாளர்கள் கமலுதீன் அகமட், எம். அருணாசலம், சிந்தா மோகன், எட்வேட் பெலேரோ, எம். ஓ. எச். பருக், கிரிதர் ஹெமாங்கு, எம். எம். ஜேக்கப், கே. ரங்கராஜன் குமாரமங்கலம், எஸ். கிருஷ்ணகுமார், பி. ஜே. குரியன், கே. சி. லங்கா, மல்லிகா அர்ஜுன், உத்தம்பாய் பட்டேல், சாந்தாரம் போத்கி, எம். ராமச்சந்திரன், ஜி. வெங்கடசாமி, பி. கே. துங்கன்.

இவர்கள் தவிர ஏழு துணையமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான அமைச்சர்கள் முன்னாள் மத்திய அமைச்சர்களாக பணியாற்றியவர்கள். முன்னாள் முதலமைச்சர்கள் சிலரும் இந்த அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர். முன்னாள் மக்களவை தலைவரும் இடம் பெற்றுள்ளனார். இந்திய ரிசேவ் வங்கியின் கவர்னர் டாக்டர் மன்மோகன் சிங்கும் மத்திய கபினெட் அமைச்சராகியுள்ளார்,

பெரும்பாலான மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் சேர்ந்தவர்கள் இவ் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். (சி)

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 20வது ஆண்டு நிறைவுவிழா இன்று 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நிலையத் தலைவர் திரு. சி. தேவகுமார் தலைமையில் நடைபெறும்:

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய பணிமனையில் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் நடைபெறும்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வயித்தி அப்பையா

(பிரபல பழக்கடை வியாபாரி - யாழ்ப்பாணம்)

| மண்ணுலகில்: | விண்ணுலகில்: | திதி: |
|---|---|---|
| 02-05-1924 | 04-07-1990 | 23-06-1991 |

எங்கள் அன்புத் தெய்வமே ஐயா! உங்கள் புன்னகை தவழும் இனிய முகம் எம் கண்களில் தெரிகின்றதே. உங்கள் இனிய குரல் ஓசை எம் காதுகளில் ஒலிக்கின்றதே. ஐயா எம்மை நீங்கள் ஆறுத்துயரில் ஆழ்த்திச்சென்று ஆண்டு ஒன்று ஆகிறது. எம்மையெல்லாம் அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழவைத்த தெய்வமே! எங்கள் இதயத்தில் என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், நண்பர்கள்.

ஆதித்தன் வளவு,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
இருபாலை.

[சி-4890]

யாழ். பல்கலைக்கழக
கிளிநொச்சி விவசாய பீடத்தில்
விலங்கு வேளாண்மைத்துறைக்கு
பண்ணை அமைப்பதற்குகந்த
கால்நடைகளை வழங்குவதற்கான

# கேள்விப் பத்திரங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால்நடைகளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் அவற்றை வைத்திருப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான விபரங்களுடன் 12-07-91 காலை 10-00 மணிக்கு முன்னர் பதிவாளர், யாழ்/பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கால்நடை வளர்ப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்" என்று குறிப்பிட்டு அனுப்பப்படுதல் வேண்டும்;

1. **தூய யமுனா பாறி, சானன் மறி ஆடுகளை வழங்குதல்:-**

யாழ்/குடாநாட்டுப் பகுதியில் இருந்து தூய இன ஜமுனா பாறி, தூய இன சானன் 08 - 18 மாத வயதிற்கிடைப்பட்ட மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க இருக்கும் ஆடுகளின் எண்ணிக்கை, இனம், ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில், வயது, உயிருடன் கிலோ ஒன்றுக்கு கோரும் விலை முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

2. **தூய இன ஜமுனா பாறி, சானன் கடா ஆடுகளை வழங்குதல்;-**

யாழ்/குடா நாட்டுப் பகுதியில் இருந்து ($1\frac{1}{2}$ — $2\frac{1}{2}$) ஒன்றரை, இரண்டரை வயதிற்கு இடைப்பட்ட தூய இன ஜமுனா பாறி, சானன் இன விருத்திக்கு உகந்த கடா ஆடுகளை வழங்க விரும்புபவர்கள், வழங்க விரும்பும் ஆடுகளின் இனம், வயது, ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில், எண்ணிக்கை, உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

3. **நாட்டு இன மறி ஆடுகளை வழங்குதல்:-**

இன விருத்திக்காக நாட்டு இனவகை ($1$ — $1\frac{1}{2}$) ஒன்று, ஒன்றரை வயதிற்கு இடைப்பட்ட மறி ஆடுகள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றன. கிளிநொச்சி பிரதேசத்தில் இருந்து இவ்வின மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள், வழங்க விரும்பும் ஆடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில், இனம், உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்/பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி;

## மாதிரிக் கேள்விப் பத்திரம்

1. முழுப் பெயர்:-
2. முகவரி:-
   (நேரடியாக வந்து பார்வையிடக்கூடியமுறையில் முகவரியை விபரமாக குறிப்பிடவும்)
3. கால்நடைகள் இருக்கும் இடம்:-
   1. கிராமம்
   2. உதவி அரச அதிபர் பிரிவு
   3. மாவட்டம்
4. வழங்க விரும்பும் கால்நடைகளின் விபரமும் கோரும் விலையும்
   1. இனம்
   2. வயது
   3. எண்ணிக்கை
   4. பாலின் அளவு (லீற்றரில்)
   5. ஒவ்வொன்றினதும் மொத்த நிறை (கிலோவில்)
   6. உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை
5. மேற்குறிப்பிடப்பட்ட கால்நடைகளை கையளிக்கக்கூடிய இடம் (முகவரி)

கேள்விப் பத்திரங்கள் 12-07-91 காலை 10-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை மண்டபத்தில் திறக்கப்படும்.

(ஏ-1399)

# ஆயுதப் போராட்டம் விரிவடைய பாராளுமன்ற அரசியல்செயலிழந்தது

(நேற்றைய தொடர்ச்சி)

1978 ஏப்ரல் 7ம் திகதி இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையும் அவரது பொலிஸ் கோஷ்டியும் முருங்கன் காட்டுக்குள் புலிகளால் அழிக்கப்பட்ட சம்பவம் சிங்கள ஆட்சியாளருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியை அழித்தமைக்கும் மற்றைய பொலிஸ் அதிகாரிகள், இனத்துரோகிகள் கொல்லப்பட்டமைக்கும் உரிமை கோரி, முதற் தடவையாக விடுதலைப்புலிகள் வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிக்கையை கொழும்புப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்தன. இதனூடாக புலிகள் இயக்கம் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சிபெற்று வருவதைக் கண்டு சிங்கள அரசு திகைத்தது.

தமிழீழத்தில் தலைமறைவாக வளர்ந்துவரும் விடுதலை இயக்கத்தை எப்படியாவது அழித்துவிடவேண்டும் என்ற நோக்கில், 1978 மே மாதம் விடுதலைப் புலிகள் தடைச்சட்டத்தை சிங்கள அரசு பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்தச் சட்டம் ஆயுதப் படைகளுக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்களை வழங்கியது. இளைஞர்களை கண்மூடித்தனமாக கைதுசெய்யவும், விசாரணை இல்லாமல் நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைத்திருக்கவும், சித்திரவதை செய்து கொல்லவும் இந்தக் கொடும் சட்டம் இடமளித்தது. ஒட்டுமொத்தத்தில், தமிழருக்கு எதிரான அடக்குமுறையை இந்தச் சட்டம் மேலும் வலுப்படுத்தியது.

1978ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ம் திகதி ஜெயவர்த்தன அரசு புதிய அரசியலமைப்பு சட்டத்தை அமுல்படுத்தியது. இந்த அரசியலமைப்புச் சட்டம் சர்வ அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை நிறுவியது. சிங்கள மொழிக்கும் பௌத்தத்திற்கும் விசேட அந்தஸ்தை வழங்கியது. தமிழ் மொழியை இரண்டாம் தர நிலைக்கு தள்ளியது. சாராம்சத்தில் சிங்கள பௌத்த பேரினவாதம் சட்டமூலம் வலுப்பெற்றதோடு, ஒரு பாசிச சர்வாதிகார ஆட்சியும் அமையப்பெற்றது. சிறிலங்கா ஆட்சியமைப்பிலிருந்து தமிழ் மக்கள் பூரணமாக அந்நியப்படுத்தப்பட்டனர்.

பாராளுமன்ற ஆசனங்களை தொடர்ந்தும் இறுகப் பற்றியிருந்த கூட்டணியினர் இந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ஆயினும் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழருக்கு எதிராகஇழைக்கப்பட்ட இந்த அநீதியை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவர உறுதிபூண்டது. இந்தச் சட்டம் சிறிலங்கா தேசியப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அதேதினத்தில் அரசுக்கு சொந்தமான பயணிகள் விமானமான 'அவ்ரோ' விமானத்தை விடுதலைப்புலிகள் தகர்த்தனர். இரத்மலானை விமானநிலையத்தில் பயணிகள் இறங்கியபோது புலிகளால் வைக்கப்பட்ட நேரக்குண்டு வெடித்து விமானம் சிதறியது. கொழும்பில் நிகழ்ந்த முதற்குண்டு வெடிப்பான இந்தச் சம்பவம், தமிழர் பிரச்சினையைச் சர்வதேசமயப்படுத்தியதுடன், இனத்துவேசத் திமிர் கொண்ட சிங்கள அரசின் முகத்தில் கரிபூசுவதாகவும் அமைந்தது.

எழுபதுகளைக் கொண்ட தசாப்தத்தின் இறுதிக் காலகட்டம், இன ஒடுக்குதலின் இரத்தம் படிந்த இருண்ட அத்தியாயத்துடன் முடிவுற்றது. தீவிரமடைந்துவந்த விடுதலைப்புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை ஒழித்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் ஜெயவர்த்தன அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்க முடிவுசெய்தது. இதன்படி 1979 ஜூலை 30ஆந் திகதி விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்திற்குப் பதிலாகப் படுமோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. சனநாயக தர்மங்களுக்கு விரோதமானதும், அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுமான இந்தக் கொடுமையான சட்டத்தைச் சர்வதேசச் சமூகம் கடுமையாகக் கண்டித்தது. இந்தப் பயங்கரவாதச் சட்டத்தைப் பிறப்பித்த நேரத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அவசரகாலச் சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டது. பிரிகேடியர் வீரதுங்கா தலைமையில் மேலதிக இராணுவப் படைகளை யாழ்ப்பாணத்தில் குவித்த ஜெயவர்த்தன, ஆறுமாத காலத்திற்குள், அதாவது 1979 டிசம்பர் 31ம் திகதிக்குள் விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் 'பயங்கரவாத' நடவடிக்கைகளும் முற்றாக அழிக்கப்படவேண்டுமெனப் பிரிகேடியர் வீரதுங்காவுக்கு விசேட ஆணை பிறப்பித்தார்.

வீரதுங்காவின் இராணுவம் யாழ்ப்பாணத்தில் வெறியாட்டம் ஆடியது. முன்னென்றும் இல்லாதவகையில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. நூற்றுக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்கள். மிருகத்தனமாகச் சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். பலர் இராணுவமுகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் வதைபட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களது சிதைந்த உடல்கள் வீதியோரம் வீசப்பட்டன. யாழ் குடாநாட்டு மக்கள் மீது இராணுவப் பயங்கரவாதம் கோர நர்த்தனம் புரிந்தது.

வீரதுங்காவின் ஆறு மாத காலக் கொடுங்கோன்மை ஆட்சியின் விளைவாகப் பெருந்தொகையில் தமிழ் இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பின்னால் அணிதிரண்டனர். பரந்துபட்ட தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு மனம் உவந்து ஆதரவு நல்கினர்.

எழுபதுகளின் தசாப்தம் சிங்கள-தமிழ்த் தேசிய முரண்பாட்டை என்றுமில்லாதவாறு முதிர்ச்சி அடையச்செய்தது. அரச ஒடுக்குமுறையின் தீவிர காலகட்டத்தில் மூர்க்கம் கொண்டெழுந்தஅரச ஒடுக்குமுறைகதொராகசீற்றம்கொண்டழுந்த புலிகளின் எதிர்ப்பு இயககம் சூறுவளி வேகத்தில் உக்கிரமடைந்தது.

இந்த தசாப்தத்தில் தமிழீழம் என்றுமில்லாதவாறு இரத்தம் சிந்தியது. சிங்கள படையெடுப்புகளும், 'இந்திய இராணுவ ஆக்கிரமிப்பும், உள்ளூர் கூலிப்படைகளின் அராஜகமுமாக தமிழீழ மண் ரணகளமாகியது.

மிகக் கொந்தளிப்பான இந்தக் காலகட்டத்தில் புயலின் மையமாக நின்று, எல்லா எதிர்ப்பியக்கத்திற்கும் ஈடு கொடுத்து தமிழரின் வீர விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் பிரபாகரன். ஆகவேதான் இந்த தசாப்தத்தின் மாமனிதனாக, வரலாற்றுக் கதாநாயகனாக பிரபாகரன் கருதப்படவேண்டியவர்.

இராணுவ, அரசியல், ராஜதந்திர பரிமாணங்களில் பல திருப்புமுனைகளை எடுத்த இந்தப் பத்தாண்டு வரலாற்றில் புலிகள் இயக்கம் பல சிக்கலான சவால்களுக்கு முகம் கொடுத்தது. இதில் இந்திய தலையீடு முக்கியம் பெறுகிறது. 83 நடுப்பகுதியில் ராஜதந்திரக் குறுக்கீடாக ஆரம்பித்து 87 அக்டோபரில் நேரடி இராணுவ ஆக்கிரமிப்பாக பூதாகாரமெடுத்து, 90 மார்ச்வரை நீடித்த இந்திய வல்லாதிக்க தலையீட்டை தனித்துநின்று எதிர்த்து ஈற்றில் வெற்றி கொண்டமை புலிகள் இயக்கத்தின் மகத்தான வரலாற்று சாதனையாகும்.

ஒரு மாபெரும் விடுதலை சக்தியாக வளர்ந்து, இக் காலகட்டத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளையும் திருப்புமுனைகளையும் புலிகள் இயக்கமே நிர்ணயித்தது. இதனை இக் கட்டுரையில் முழுமையாக மீளாய்வுசெய்வது கடினம். எனினும் சுருக்கமாகப் பார்ப்போம்.

எண்பதுகளின் ஆரம்பம், கூட்டணியின் இனத்துரோகப் படலமாகவும் சிங்களப்பேரினவாதத்தின் இன ஒழிப்பு வன்முறையாகவும் தொடங்கியது. இந்த வன்முறையான அழுத்தம், தமிழீழத்தில் அரசியல் வன்முறையை அலைமோதச் செய்தது. இந்த அரசியல் வன்முறையால் எழுந்த புறநிலைகள் ஒரு பலம் வாய்ந்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை; புலிகள் இயக்கத்தைப் பிறப்பெடுக்கச் செய்தது. அரச ஒடுக்குமுறை மேலும் மேலும் தீவிரமடைந்து செல்ல, ஆயுத எதிர்ப்பு முறையும் தீவிரம் அடைந்து சென்றது. பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம் வளர்ந்து விரிவடைய, மிதவாதப் பாராளுமன்ற அரசியல் செயலிழந்து போனது. ஒட்டுமொத்தத்தில் இந்தத் தசாப்தம் தமிழரின் அரசியல் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக உயிர் வடிவம் பெறச்செய்ததுடன், தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட, தமிழினத் தனியரசை நிறுவும் வரலாற்றுத் தேவையையும் வெளிப்படுத்தியது.

வரலாறு காணாத வன்முறைப் பூகம்பங்கள் இலங்கைத் தீவை உலுப்பிய காலகட்டமாக எண்பதுகளின் தசாப்தம் அமைந்தது. இந்தக்

[நாளை; இலங்கை விவகாரத்தில் இந்தியா எவ்வாறு தலையிட்டது?]

(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா மலரில் வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 'இரண்டு தசாப்தங்களும் புலிகளும்' என்ற கட்டுரை தொடர்ச்சியாக இங்கு தரப்படுகிறது.)

**கலாநிதி அன்ரன் பாலசிங்கம்**

## இராசி பலன்

23-06-1991

ஞாயிற்றுக்கிழமை

துவாதசி பி. இ. 3-45வரை விசாகம் முழுவதும், மரண யோகம், இராகுகாலம் மாலை 4-24 முதல் 5-54 வரை. சுப நேரம் காலை 3-54 முதல் 10-24 வரை.

மேடம்: விவேகமானமுடிவு, ஆலய தரிசனம், குடும்ப மகிழ்ச்சி.

இடபம்: காரிய பலிதம், புதிய முயற்சி, அவசரகோலம்.

மிதுனம்: வயிற்றில்ரோகம், மனைவியால் துன்பம், புத்திரர் பெருமை.

கடகம்: விடாமுயற்சி, தொழில் கஷ்டம், மனக்குறை.

சிங்கம்: அதிகார சிறப்பு, அறிஞர் உபதேசம், குடும்ப சுகம்.

கன்னி: கடும் வாதம், பயணங்களால் அநுகூலம், இனசன மகிழ்ச்சி.

விருச்சிகம்: விவாதம், பொருட்செலவு, தொழில் பிணக்கு.

தனுசு: அற்பர் நேசம், குடும்ப செலவு, பிதாவழி உதவி.

மகரம்: தொழில் முதலீடு, வசதி வாய்ப்பு, மனைச்சிறப்பு.

கும்பம்: பகைவர் துன்பம், வசதி வாய்ப்பு, மனைச் சிறப்பு.

கும்பம்; பகைவர் துன்பம் அதிக யோசனை, வைத்தியச் செலவு.

மீனம்: சஞ்சலமடைதல், பணமின்மை, வரட்டுக் கௌரவம்.

- ஜோஸ்யர்

# போராளிகள் விடும் தவறுகளை

## காணாததுபோல இருக்க முடியாது

### செல்வி ஜெயலலிதா பேட்டி

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் இலங்கையில் நடத்தும் உரிமைப் போருக்கு ஆதரவு தருவது என்பது வேறு. அதற்காக அந்த நாட்டுப் போராளிகள் தமிழகத்தில் செய்யும் தவறுகளைக் கண்டும் காணாதது போல இருக்க முடியாது என்று அ. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அப்பேட்டியில் கூறியதாவது:

''யாருக்கும் நமது உரிமைகளை விட்டுத்தர முடியாது.

இலங்கைப் போராளிகள் தமிழகத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளார்கள் பரவலான ஒரு தொடர்பு இயந்திரத்தை அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதி ஆட்சி இங்கே வந்தபிறகு சட்டம் ஒழுங்கு நிலைமை சாதாரண நிலைக்கு திரும்பும் என்று எல்லோரும் எதிர்பார்த்தோம். ஆனால் ராஜீவ் காந்தி மிகவும் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்ட பிறகு இலங்கைப் போராளிகள் இங்கு ஆழமாக வேரூன்றிவிட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

எல்லோரும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இலங்கைப் போராளிகள் தமிழகத்தில் நல்ல பலமுள்ளவர்களாக சக்திவாய்ந்த ஒரு இயக்கமாக



அவர்கள் வளர்ந்துவிட்டார்கள். இதற்குக் காரணம் ஏற்கனவே இம்மாநிலத்தில் ஆட்சியிலிருந்த தி. மு. க.தான்.

மாநில அரசு அவர்களுக்கு ஊக்கமும் ஆதரவும் தரவில்லையென்றால் அவர்கள் இங்கே ஊடுருவியிருக்க முடியாது செயல்பட்டிருக்க முடியாது; அதனால் ஆட்சியிலுள்ள மாநில அரசு மனதுவைத்தால் இவர்களுடைய சட்டவிரோத தவறான காரியங்களை நிறுத்தியிருக்க முடியும்; தடுக்க முடியும்.

உண்மையாக தமிழகத்தில் அடைக்கலம் தேடி வந்திருக்கின்ற அகதிகளுக்கும் போராளிகளுக்கும் வித்தியாசம் உண்டு. அகதிகளிடம் எங்கள் அணுகுமுறை வேறுவிதமாக இருக்கும். போராளிகளைப் பொறுத்தவரை எமது அணுகுமுறை வேறுவிதமாகஇருக்கும்.

உண்மையான அகதிகளுக்கு தாயுள்ளத்தோடு நாம் கருணை காட்டுவோம். இன உணர்வின் அடிப்படையில் மட்டுமல்ல மனிதாபிமான அடிப்படையிலும் அவர்களுக்கு உதவுவோம்.

சட்டத்திற்கு விரோதமாக அனுமதியின்றி யார் ஆயுதங்கள் வைத்திருந்தாலும் அவர்கள்மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## பலதும் பத்தும்

### பொசிவு நீர்ப்பாசன முறை

இஸ்ரவேல் நாட்டில் ஒரு தந்தையும் மகனும் இணைந்து கண்டுபிடித்த ஓர் நவீன இரசாயன முறைதான் இந்த பொசிவு நீர்ப்பாசன முறை. இஸ்ரேலிய பாலைவனங்களில் இந்த நவீன முறைமூலம் பழங்களும், காய்கறிகளும் உற்பத்தி செய்யப்படுகிறது. வளமற்ற மணல்தரைகளுக்கும் நீர் பற்றுக்குறையுள்ள இடங்களுக்கும் உவர் நீர் உள்ள இடங்களுக்கும் இது உகந்த முறையாகும். இந் நீர்ப்பாசன சாதனம் வடிகட்டியுடன் கூடிய நீர்க்குழாய், உரப்பசளை தாங்கி பொலித்தீன் குழாய்கள் ஆகியவற்றைக் கொண்டதாகும். உரப்பசளை கலந்த நீர் துளிதுளியாகப் பொசிந்து வேரையடைந்து அமோக விளைச்சலைக் கொடுக்கின்றன.

- ஞாநி

# கொக்கட்டிச் சோலையில் எலும்புக்கூடுகளை கண்டு திகிலுற்ற விசாரணைக்குழு

[கொழும்பு]

கொக்கட்டிச்சோலைக்கு விசாரணை நடத்துவதற்குச் சென்ற குழுவினர் எரியுண்ட பல சடலங்களையும், மண்டையோடுகளையும் எலும்புக்கூடுகளையும் கண்டு திகிலடைந்தனராம்.

இப்படியொரு கொடூரமான காட்சியைக் கண்டதும் தாங்கள் திடுக்குற்று தலையில் கையை வைத்ததாக இக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கொக்கட்டிச் சோலையில் அண்மையில் இடம்பெற்ற தமிழ்மக்கள்படுகொலைகுறித்து விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இளைப்பாறிய நீதியரசர் திரு. செனிவரத்ன தலைமையிலான குழுவினருக்கே மேற்கண்ட அனுபவம் ஏற்பட்டது.

இக்குழுவினர் அண்மையில் மகிழடித்தீவுக்குச் சென்று விசாரணைகள் மேற்கொண்டனர்.

மட்டுநகரிலிருந்து ஹெலிகொப்டரில் சென்று இறங்கிய குழுவினர் ஒன்றரைமைல் தூரம் நடந்து மகிழடித்தீவை அடைந்தனர்.

இக்குழுவினருடன் மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன்சென்றனர்.

பல கொலைகள், தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற முதலைக்குடா போன்ற பாதிக்சப்பட்ட பகுதிகளுக்கு இந்த விசாரணைக்குழு செல்லாமல் மகிழடித்தீவுடன் தமது விசாரணைகளை முடித்துக்கொண்டு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாண்டிச்சேரி

# அமைச்சரவையில் அ.தி.மு.க. சேராது

[புதுச்சேரி]

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் அமையவிருக்கும் காங்கிரசின் அமைச்சரவையில் அ. அ. தி. மு. க. சேராது என்று புதுச்சேரி அ. அ. தி. மு. க. அமைப்பாளர் என். ஆர். சண்முகம் நேற்று புதுச்சேரியில் தெரிவித்தார்.

தமது கட்சி அரசுக்கு வெளியே இருந்து ஆதரவு அளிக்குமென்றும் மேலும் அவர் தெரிவித்தார். (மா)

# ★ குண்டு வெடிப்பையடுத்து கொழும்பு மாநகர் எங்கும் பெருமளவு தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்றும், நேற்றுமுன்தினமும் பெருமளவு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் குறிப்பாகத் தமிழ் இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பையடுத்தே லொட்ஜ்களிலும், ஹோட்டல்களிலும் தங்கியிருந்தவர்களும், மற்றும் பல பகுதிகளிலுமாகப்பெருமளவுதமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பையடுத்துக் கொழும்பு மாநகர் முழுவதும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுப் பலத்த சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## விசாரணை ஆரம்பம்

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக வாசலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகத்திற்குரிய பலர் விசாரணைக்குட் படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. (சி)

## இந்திய தூதரகத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்தே இந்திய தூதரகத்திற்கு உடனடியாக பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கென தூதரகத்தை சுற்றியும், தூதரக ஊழியர்களின் வீடுகளை சுற்றியும் விசேட அதிரடிப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் (க-சி)

## புலிகளின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்கள், இரு பயணிகள் விமானங்கள், இரு ஹெலிகள் சகிதம் மடுவைநோக்கி முன்னேறமுயன்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினரை நோக்கி விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இருதரப்பினருக்கும் இடையே காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரை தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றதாகவும் படையினரின் விமான, தரை தாக்குதலை எதிர்த்து விடுதலைப்புலிகளும் தீரமுடன் சளைக்காது கடும் தாக்குதல் தொடுத்துள்ளனர்.

இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கி பிரமனாலங்குளம் சந்திப்பகுதியை அடைந்துள்ளனர். (க)

# காரைநகர் மக்கள் நயினை சென்றனர்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில்படையினரிடம் சிக்கியுள்ள பொதுமக்கள் நயினை நாகபூஷணி அம்மனை தரிசிக்க அனுமதிக்கப்பட்டு அங்கு சென்று மீண்டும் காரைநகர் திரும்பியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை காரைநகரிலுள்ள அனைவரும் நயினாதீவுக்கு படையினரால் கொண்டுசெல்லப்பட்டு ஆலய தரிசனத்தின் பின் அன்றுமாலை மீண்டும் காரைநகருக்கு அனுப்பப்பட்டனர்.

இதேவேளை இவர்கள் நயினாதீவிலிருந்து வெளியேறாதவாறு படையினர் பெருமளவில் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தார்களாம். (சி)

## வடக்கு கிழக்கிலும் பரீட்சை

[கொழும்பு]

க. பொ. த. உயர்தரப் பரீட்சை வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

1991-ஆம் ஆண்டிற்கான க. பொ. த. உயர்தரப்பரீட்சை ஆகஸ்ட் 3-ம் திகதி தொடக்கம் 27-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## முப்படைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

இச்சந்திப்பில் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாம். (சி)

## பலாலியில் மோதல்

[யாழ்ப்பாணம்]

பலாலியிலிருந்து படையினர் நேற்று நண்பகல் ஷெல்தாக்குதலுக்கும், துப்பாக்கிப் பிரயோகத்துக்கும் மத்தியில் 3 மணிக்குப் பின்னர் குப்பிளான் பகுதியைநோக்கி முன்னேற முயன்றனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் வரையில் விடுதலைப் புலியினர் எதிர்த்தாக்குதலினை நடாத்தி படையினரை பின்வாங்கச் செய்தனர். படையினருக்கு பலத்த சேதமேற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (56)

## ஆனையிறவில் விமான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாம் பகுதிகளில் நேற்று முற்பகல் 10 மணியளவில் அவ்ரோ விமானம் குண்டு வீச்சுத்தாக்குதல்களை நிகழ்த்தியது.

மாலை 4 மணியளவில் ஆனையிறவிலிருந்து படையினர் இயக்கச்சிப்பக்கமாக கடும் ஷெல் தாக்குதல்களையும் நடாத்தினர். (56)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100396/81

# கருணாநிதிக்கு எதிராக விசாரணை

(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி விசாரணைக்குட்படுத்தப்படுவாரென தமிழக புதிய முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு குலைந்ததற்கும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கும் திரு கருணாநிதியின் அரசு காரணமாயிருந்துள்ளதாகவும் இவற்றுக்காக அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவாரென்றும் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

மேலும் இதற்கு காரணமாயிருந்தவர்கள் மீதும் விசாரணை நடாத்தப்படுமென்றும் கூறினார். [சி]

## குண்டு வெடித்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குண்டுவெடிப்புகளை தவிர்க்க எவ்விதமான நடவடிக்கை எடுக்கலாமென்பதுபற்றி தீவிரமாக ஆராயப்பட்டுவருகிறது.

தற்கொலைப் படைத் தாக்குதல் என்று வரும்போது தனிநபர் ஒருவருக்குக்கூடப் பாதுகாப்பு வழங்க முடியாதென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

## தென்னிந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்தில் இவ்விசை நிகழ்ச்சியை நடாத்த இருந்தது. இதற்காக எஸ் பி பாலசுப்பிரமணியமும் கொழும்பு வந்துள்ளார்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தினையடுத்து எழுந்துள்ள பதற்றத்தால் இந்நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டுள்ளது. [சி]

## இரு தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்திலுள்ள மகிந்தபுரத்தில் புதிய சிறிலங்கா இராணுவ முகாம் இம்மாதம் 15ந் திகதி அமைக்கப்பட்டுள்ளது. (மா

## கருணாநிதி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெருந்தோல்வியை தமது தோல்வியாக எண்ணி தமது சட்டபேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய முடிவு எடுத்ததாகவும் அனுதாப அலையாலும், வீண் பழி சுமத்தலாலும் உண்மையான பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு தமது கட்சிக்கு பெரும் தோல்வி ஏற்பட்டதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார். [மா

## விமானத் தாக்குதலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குளத்தில் இருந்து தப்பிவந்த கிராமவாசி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: மேற்படி சம்பவத்தினால் இராணுவத்தினர் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவுவதாகவும் இராணுவத்தினர் புலிகளுக்கெதிராக யுத்தம் செய்வதற்கு தயக்கம்காட்டி வருவதாகவும் இராணுவ அதிகாரிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே யுத்தமுனைக்குச் சென்று வருகின்றார்கள்.

யுத்தமுனையில் தற்போது நிற்கும் இராணுவத்தினர் பொம்மர், ஹெலிகளையும் வானத்தில் கண்டவுடன் மறைவிடங்களில் பதுங்கிக்கொள்கிறார்கள்.

இதேநேரத்தில் இப்பகுதிகளில் உள்ள விடுதலைப்புலிகளின் காவல் அரண்கள் மிகவும் பலமுடையதாக இருப்பதாகவும் இக்காவலரண்களை இராணுவத்தினரால் நெருங்க முடியாமல் இருப்பதாகவும் கூறினார்.

மேற்படி மோதலில், வவனியா நகர்வெறிச்சோடிக் காணப்படுவதாகவும், அங்குள்ள தமிழர்களின் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டுக்கிடப்பதாகவும் அங்கு உணவுப்பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர்மேலும்கூறினார்.

## தற்கொலைப்படை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வெடிகுண்டை எவ்வாறு சம்பந்தப்பட்டவர்கள் அங்குஎடுத்துச் சென்றார்கள் என்பதும் பெரும் அதிர்ச்சியளித்துள்ளதாம்.

### மக்கள் செல்லத் தடை

இதற்கிடையில் ரூபவாஹினி நிலையம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்குப் பொதுமக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளாகலாமெனக் கருதப்படும் இடங்களெல்லாம் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளன.

### கொலைப் பட்டியல்

கொழும்பில் தொடர்ந்தும் தற்கொலைப்படை இப்பதாகப் புலனாய்வுத்துறையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். 'கொலைப் பட்டியலில்' ஜனாதிபதியின் பெயர் முதலிடத்திலிருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். தற்போது கொழும்பில் ஒரே பதற்றமாகவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [மா-சி]

## மரண அறிவித்தல்

### பொ. இராஜசுந்தரம்

கொக்குவில் மேற்கு மணியர்பதியைச் சேர்ந்த பொன்னம்பலம் இராஜசுந்தரம் 22-06-91சனிக்கிழமை அன்று சிவபதமெய்தினார். இவர் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், இராமலிங்கம், இராஜலட்சுமி, நாகராஜா சிவானந்தன், சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியவதி, சண்முகமூர்த்தி, சாந்தா, வனஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணதாஸ், மீனலோஜினி, சாந்தினி, பரமதாஸ், கோபிநாத், உமாநாத், சண்முகாசினி, பிரகாசினி, நிரஞ்சன், விஜேத், சஞ்சய், சுஜித் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-06-91 சனிக்கிழமையன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. சண்முகமூர்த்தி
[மருமகன்]

மணியர் பதி,
கொக்குவில் மேற்கு.

[சி 4901]